# 3. கண்ணதாசனின் திரைப்படப் பாடல்களிலே சில விஞ்ஞானக் கருத்துக்கள் - ஒரு நோக்கு

தமிழ்த் திரைப்பட உலகு 65 ஆண்டு கால வரலாறு கொண்டது. 1931ம் ஆண்டிலே முதல் தமிழ்த் திரைப்படம் வெளியாயிற்று. முதல் பதினேழு ஆண்டுகளை அதன் இளமைப் பருவமெனக் கருதினால், அண்ணளவான 1948ம் ஆண்டளவிலே தமிழ்த் திரைப்பட உலகு "மேஜரா"யிற்று. அது "மைனராக" இருந்த காலத்திலும் பாடல்கள் ஏராளக் கணக்கில் இடம்பெற்றன. அக்காலகட்டத்திலே முதன்மைபெற்ற பாடலாசிரியராக இருந்தவர் பாபநாசம் சிவன். தமிழ்த் திரைப்பட உலகு "மேஜரான" போது கண்ணதாசன் பாடலெழுதப் புகுந்தார்.

1970இல் வெளியான அவரது "திரை இசைப் பாடல்கள்" தொகுப்பின் முதல் தொகுதியிலே கண்ணதாசன் எழுதியதாவது:

"1948இல் நான் பாடல் எழுதத் தொடங்கினேன். இந்த இருபத்து இரண்டு ஆண்டுகளில் சுமார் 2000 பாடல்கள் எழுதியுள்ளேன்..... வளமான தமிழ் துணையாக இருந்ததால், பல நேரங்களில் சொற்சிலம்பமும் பயின்றிருக்கின்றேன். எளிய ரசனைக்காக "டப்பாங்கூத்து"களும் எழுதியிருக்கிறேன். சித்தர் ஞானத்திலும் இறங்கியிருக்கிறேன். பக்தித்துறைக்கும் படைத்திருக்கிறேன்.........."

கண்ணதாசனுடைய பாடல்கள் சினிமாவில் இடம்பெற்ற காலகட்டத்தில், விஞ்ஞானத்துறையில் பாரிய முன்னேற்றங்கள் இடம்பெற்றன. அவற்றை கண்ணதாசனின் சில பாடல்கள் விவரித்தன. மேலும், விஞ்ஞானத் துறையில் சில அடிப்படைக் கருத்துக்களாக, கருதப்படும் கொள்கைகள், விளக்கங்கள், அனுமானங்கள் போன்றவற்றையும் கண்ணதாசன் தனது பாடல்களில் விவரித்துள்ளார். இத்தனைக்கும் அவர் விஞ்ஞானம் படித்தவரல்லர்; ஒரு விஞ்ஞானியுமல்லர். அவரே கூறுகிறார்: "பள்ளிக்குச் சென்று படித்ததில்லை; ஓர் எழுத்தும் தெரியாது."



அவர் ஒரு படிக்காத மேதையாக விளங்கினார் என்றே கூறலாம். கண்ணதாசனின் பாடல்களில் விரவியுள்ள சில விஞ்ஞானக் கருத்துக்களை இங்கு நோக்குவோம்.

## மேற்புயங்களின் விடுதலை (Emancipation of Forelimbs)

மனிதன் விலங்கியல் பாகுபாட்டில் 'பிறைமேட்ஸ்' (Primates) வருணத்தைச் சார்ந்தவன். மனிதனை ஏனைய விலங்குகளிலிருந்து பாகுபடுத்திக் காட்டி, மனிதனுடைய கூர்ப்பியல் முன்னேற்றத்தில் முக்கியபடியாக விளங்கியது. நாற்காலியாக (quadruped) இருந்த குரங்கு மூதாதையர்கள் இரு காலியாக (biped) நடக்கத் தொடங்கியதே . மேற்புயங்கள் (forelimbs) நிலத்திலிருந்து சுயாதீனமாக எழுப்பப்பட்டவுடனேயே, ஆயுதங்கள் பாவிப்பதற்குரிய தன்மை சாத்தியமாயிற்று. அத்துடன், இரு வகையான 'பிடி' கள் :- (1) வலுப்பிடி (power grip), (2) நுண்ணியபிடி (precision grip) உதயமாயின 'கை'களின் பாவனையே மனிதனுடைய கூர்ப்பியல் வெற்றிக்கு ஆதாரப்படி எனலாம். இதனைக் கவிஞர்,

*"ஆற்று நீரை தேக்கி வைத்து அணைகள் – கட்டும் கைகளே*
*ஆண்கள் பெண்கள் மானங் காக்க – ஆடை தந்த கைகளே*
*சேற்றில் ஓடி நாற்று நட்டு களை – எடுக்கும் கைகளே*
*பலன் மிகுந்த யந்திரங்கள் படைத்து – விட்ட கைகளே*
*பாதை போட்டு உலகை ஒன்றாய் – இணைத்து வைத்த கைகளே!"*

என எளிய வரிகளில் விளக்கியுள்ளார்.

## பெற்றோர் பராமரிப்பு (Parental care)

பாலூட்டிகள் (mammalia) வகுப்பை மனிதன் சார்ந்தவன்.

குட்டிகளுக்குப் பால் கொடுக்கும் உடற்றொழிலியல் இயல்பு, கூர்ப்பிலே மிக முன்னேற்றமான ஒரு படியாகும். மனிதனுடைய கூர்ப்பியல் வெற்றிக்கு இன்னொரு காரணம், மிகுந்த 'பெற்றோர் பராமரிப்பு' நடத்தை உருவாகியதே. பிறந்தவுடனேயே 'சிறிசு'களை அப்படியே இயற்கையின் பராமரிப்பில் விட்டுச் செல்லாமல், தாயும் தந்தையும் நீண்டகாலத்திற்கு சூழலின் பாதக விளைவுகளிலிருந்து குழந்தையைப் பராமரிக்கின்றனர். 'தாய்மை' எனும் இந்தத் தூய, உயர்ந்த கூர்ப்பியல் பண்பை கவிஞர், இலகுவாக எடுத்துக்கூறுகிறார், இப்படியாக :

*"பண்பு தெரியாத மிருகம் பிறந்தாலும்*
*பால் தரும் கருணை அது – பிறர்*
*பசித்த முகம் பார்த்துப் பதறும் நிலை*
*பார்த்துப் பழம் தரும் சோலை அது*

*இருக்கும் பிடிசோறு தனக்கென்று எண்ணாமல்*
*கொடுக்கின்ற கோவில் அது – தினம்*
*துடிக்கும் உயிர்கண்டு தோளில் இடம் தந்து*
*அணைக்கின்ற தெய்வம் அது"*

## மனிதனுடைய வெற்றிப்படிகள்

சுமார் ஒரு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் மனிதனுடைய குரங்கு மூதாதையர்கள் இவ்வுலகில் வாழ்ந்திருக்கலாம் என்று நிபுணர்கள் கருதுகின்றனர். இப்படியிருந்தும், கடந்த பத்தாயிரம் ஆண்டுக்காலத்திலேயே மனிதன், விலங்கு வாழ்க்கை முறையிலிருந்து விடுபட்டான். தொடர்ந்த படிகளை கவிஞர்,

*"ஆதி மனிதன் கல்லையெடுத்து வேட்டையாடினான்*
*அடுத்த மனிதன் காட்டையழித்து நாட்டைக் காட்டினான்*
*மற்றும் ஒருவன் மண்ணிலிறங்கி பொன்னைத் தேடினான்"*



என விளக்கி விட்டு, இந்த இருபதாம் நூற்றாண்டிலே ஏற்பட்ட விஞ்ஞான முற்னேற்றங்களை,

*"நேற்று மனிதன் வானில் தனது தேரை ஓட்டினான்*
*இன்று மனிதன் வெண்ணிலாவில் இடத்தைத் தேடினான்"*

என்று விவரித்த பின்னர்,

*"வரும் நாளை மனிதன் ஏழு உலகை ஆளப்போகின்றான்"*

என்று ஆரூடம் கூறுகிறார்.

இதே கருத்துக்களையே மேலும் சில பாடல்களிலே,

*"பறவையைக் கண்டான் – விமானம் படைத்தான்*
*பாயும் மீன்களில் படகினைக் கண்டான்*
*எதிரொலி கேட்டான் – வானொலி படைத்தான்"*

என்றும்,

*"வானத்தில் ஏறிச் சந்திரமண்டல வாசலைத் தொடலாமா?*
*மாண்டுகிடக்கும் மனிதனின் மேனி மறுபடி எழலாமா?*
*என்றொரு காலம் ஏங்கியதுண்டு –*
*இன்று கிடைத்தது பதில் ஒன்று*
*ஞானம் பிறந்து வானில் பறந்து*
*மீண்டு வந்தான் உயிர் கொண்டு"*

என்றும் பாடிக் களிப்படைகிறார். இக் கடைசி வரியிலே 'ஞானம்' என இவர் விவரிப்பது, விஞ்ஞானம் தான் என்பதிலே வேறு பாடு இருக்க முடியாது.

மனிதனுடைய வெற்றிகளுக்குக் காரணம் விஞ்ஞானிகள், ஆராய்பவர்கள், பரிசோதிப்பவர்கள் ஆகியோரின் அசாத்திய

துணிச்சல் தான் என்று சொல்லாமலே விளங்கும். கொலம்பஸ், வாஸ்கொடகாமா போன்றோர் கடலுக்குப் பயந்திருந்தால், அவர்கள் புதிய உலகைக் கண்டுபிடித்திருக்க மாட்டார்கள். மற்றும், சோக்கிரட்டீஸ், கலீலியோ, கொப்பணிக்கஸ், சார்ள்ஸ் டாவின், ரைட் சகோதரர்கள், ஐன்ஸ்டீன் போன்ற அறிஞர்கள் எதிர்ப்புக்களுக்குப் பயந்து தமது ஆராய்ச்சிகளைக் கைவிட்டிருந்தால், விஞ்ஞானம் இந்தளவுக்கு ஏற்றம் கண்டிருக்குமா என்பது ஐயமே! இக்கருத்தைக் கண்ணதாசன், எளிய வரிகளிலே,

*"கடலுக்குப் பயந்தவன் கரையில் நின்றான் – அதைப்*
*படகினில் கடந்தவன் உலகைக் கண்டான்*
*பயந்தவன் தனக்கே பகையாவான் – என்றும்*
*துணிந்தவன் உலகிற்கு ஒளியாவான்"*

என்றும்,

*"கொட்டும் மழையும் இடி வந்தாலும்*
*அச்சம் என்பது கூடாது!*
*பயந்தவனுக்கு நிழலும் பகையே !*
*துணிந்தவனுக்குக் கடலும் சிறிதே !"*

என்றும்,

*"நெஞ்சில் துணிவிருந்தால் நிலவுக்கும் போய் வரலாம்*
*உலகம் போகின்ற வேகம் – உருவம் இனிமேல் மாறும்*
*நடக்கும் கதைகளைப் பார்த்தால்*
*நமக்கே சிறகுகள் முளைக்கும்"*

என்றும் பாடினார்.



## சூழலும், சூழல் மாற்றங்களின் விளைவுகளும்

மனிதன் பல வெற்றிப்படிகளைத் தாண்டிய போதிலும், சமீபகாலம்வரை அவன் வாழ்ந்த சூழலிலே மாற்றம் ஏற்படவேயில்லை. இதனைக் கண்ணதாசன்,

*"வந்த நாள் முதல் இந்தநாள் வரை*
*வானம் மாறவில்லை*
*வான் மதியும் மீனும் கடல் காற்றும்*
*மலரும் மண்ணும் கொடியும் சோலையும்*
*நதியும் மாறவில்லை*
*மனிதன் மாறிவிட்டான்"*

எனக் கூறுகிறார்.

ஆனால், சூழலை மனிதன் மாற்ற முனைகின்றான். சூழல் மாற்றத்தின் ஒரு முக்கிய படி, நகரவாக்கம் ( urbanisation) எனலாம். நகரவாக்கத்தைப் பற்றி, கவிஞர் நான்கு வரிகளிலே,

*"சிந்திய வேர்வை நிலத்தில் ஓடி*
*சிறுகச் சிறுக ஆறாச்சு – அதை*
*நம்பிய பேர்கள் வாழ்ந்ததாலே*
*நாடு நகரம் ஊராச்சு "*

எனப் பாடினார்.

நகரவாக்கத்தின் விளைவுகள் எப்படியுள்ளன? சாதகமான விளைவுகள் பல ஏற்பட்டுள்ளன. அத்துடன், பாதக விளைவுகளும் ஏற்படாமலில்லை. ஒரு பட்டிக்காட்டானின் மனநிலையிலிருந்து, நகரத்தின் அலங்கோலத்தைக் கவிஞர்,

*"சீட்டுக்கட்டு கணக்காக – இங்கே வீட்டைக் கட்டி இருக்காக*
*வீட்டைக்கட்டி இருந்தாலும் – சிலர் றோட்டு மேலே படுக்காக*
*பட்டணத்துத் தெருக்களிலே – ஆளு நிக்க ஒரு நிழலில்லையே*
*வெட்டவெளி நிலமில்லையே – நெல்லு கொட்ட ஒரு*
*இடமில்லையே!"*

என விபரிக்கிறார். இது உண்மைதான் !

சனத்தொகைப் பெருக்கத்தால் ஏற்படும் விளைவு இது. சனத்தொகைப் பிரச்சினையையும், இறப்பையும் பற்றி கவிஞர் இன்னொரு பாடலிலே,

*"வந்தவரெல்லாம் தங்கிவிட்டால் – இந்த*
*மண்ணில் நமக்கே இடமேது?"*

எனக் கேள்வி எழுப்புகிறார்.

## விவசாயத்தின் மகத்துவம்

சனத்தொகை மிகுந்தால் உணவுப் பஞ்சம் ஏற்படும். உணவுப் பெருக்கம் மனித இனத்தின் பாதுகாப்பிற்கு அத்தியாவசியம். எனவே, விவசாயப் பொருளாதாரத்திலே தான் 'உயிர்' இருக்கின்றது எனுங் கருத்தை,

*"வயலே நம்பி வாழ்ந்திருந்தா கண்ணம்மா –*
*ஒரு பயலே நம்பத் தேவையில்லே சின்னம்மா*
*ஆட்டம் போடும் மனிதனுக்கும் ஆரவாரம் செய்பவருக்கும்*
*கோட்டை கட்டி வாழ்பவருக்கும் கண்ணம்மா – நெல்லு*
*மூட்டையில் தான் உயிரிருக்கு சின்னம்மா"*

எனக் கவிஞர் வலியுறுத்துகிறார்.



விவசாயத்தின் மகத்துவத்தைப் புறக்கணிக்கும் இளைய சந்ததியினரைப் பார்த்து கவிஞர் ஏளனமாக,

*"தேரோட்டம் காரினிலே ரொம்ப*
*திமிரோடு போறவரே – எங்க*
*ஏரோட்டம் நின்னு போனா – உங்க*
*காரோட்டம் என்னவாகும்?"*

என நையாண்டியும் செய்கிறார்.

## முடிவுரை

திரைப்படப் பாடல்களை ஏளனமாகக் கருதும் பேர்வழிகள் இன்னும் இருக்கிறார்கள். திரைப்படப் பாடல்களின் வரம்புக்குள் நின்று கொண்டு, விஞ்ஞானக் கருத்துக்களை எளிய தமிழில் கூறமுடியும் என இவர்களுக்கு கண்ணதாசன் எடுத்துக் காட்டியுள்ளார்.

## பிற்குறிப்பு

இக் கட்டுரை ஆக்கத்திற்கு பயன்படுத்த பட்ட நூல்:

கவிஞர் கண்ணதாசனின் – *திரை இசைப் பாடல்கள்* (முதல் தொகுதி) வானதி பதிப்பகம், சென்னை, 1970; 450 பக்.

கவிஞர் 1971 இலிருந்து 1981 வரை எழுதியுள்ள திரைப்படப் பாடல்கள் இந்நூலிலே இடம்பெறவில்லை.